**24.04.2023**

**அ.வ.எண். 160/2017**

**வா.சா.1 கோதண்டபாணி அவர்களின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. தாவா கிராமத்தில் தாவா சொத்துக்கள் தவிர எங்களுக்கு வேறு பூர்வீக சொத்துக்கள் உள்ளதா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எங்கள் பூர்வீக சொத்துக்களை ஆவணம் மூலம் விற்பனை செய்துள்ளோம். நான் கிரையம் கொடுத்த சொத்து எனக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைத்ததா என்றால் ஆமாம். எந்த வருடம் யார் யாருக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் எனது அப்பா பாகப்பிரிவினை செய்துக்கொண்டார் எனக்கு தெரியாது.

2. எந்த ஆவணத்தை பார்த்து எந்தெந்த சொத்துக்கள் எனது பூர்வீக சொத்துக்கள் என்று நான் தெரிந்துக்கொண்டேன் என்றால் எனது தகப்பனார் 1943ம் வருடம் அடமானம் வைத்தார், அடமானப்பத்திரத்தினை பார்த்து தான் தெரிந்துக்கொண்டேன். மேற்படி அடமானப்பத்திரத்தில் தாவா சர்வே எண் உள்ளது. எவ்வளவு விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 20 செண்டு. மேற்படி அடமானப்பத்திரத்தினை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும்.

3. கன்னியப்ப முதலியார் மனைவி ரங்கம்மாள் எனது பங்காளி.

வா.சா.ஆ.1க்கு முன்பு தாவா சொத்தின் பட்டா மேற்படி ரங்கம்மாள் பெயரில் கூட்டுப்பட்டாவாக இருந்தது என்றால் சரிதான். எனவே ரங்கம்மாள் என்பவருக்கும் தாவா சொத்தில் உரிமையுள்ளது என்றால் இருக்கும். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 ல் ரங்கம்மாள் பெயர் இல்லை என்றால் சரிதான். ரங்கம்மாள் என்பவருக்கு தாவா சொத்தில் எவ்வளவு விஸ்தீரணம் உரிமையானது என்றால் எனக்கு தெரியாது.

4. நானும் தட்சிணாமூர்த்தியும் ரங்கம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். ரங்கம்மாள் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். ரங்கம்மாள் பெயரிலும் கூட்டுப்பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையில் எதன் அடிப்படையில் வா.சா.ஆ.1 லிருந்து ரங்கம்மாள் பெயர் நீக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. ரங்கம்மாளுக்கு உரிமையான பங்கினையும் சேர்த்து வாதிகளாகிய நாங்கள் தாவா சொத்தில் முழுஉரிமை கோரமுடியாது என்றால் கோரமுடியும்.

5. சர்வே எண் 212/3 ல் தான் தட்சிணாமூர்த்தி, கோதண்டன் மற்றும் ரங்கம்மாள் பெயரில் கூட்டுப்பட்டா உள்ளது என்றால் சரிதான், ஆனால் ரங்கம்மாள் பெயர் நீக்கப்பட்டுள்ளது. சர்வே எண் 212/3 னை தான் சர்வே எண் 212/3ஏ,

212/3பி என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 212/3ஏ க்கு எனது பெயரிலும், தட்சிணாமூர்த்தி பெயரிலும் பட்டா தாக்கலாகியுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 212/3ஏ ல் 2 ஏர்ஸ் நிலமும், சர்வே எண் 212/3பி ல் 2 ஏர்ஸ் நிலமும் ஆக மொத்தம் 10 ஏர்ஸ் நிலமான 25 செண்டு நிலத்திற்கு எனக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதால் நான் வழக்கில் கோரிய சொத்தின் விஸ்தீரணத்திற்கு அதிகமாக அளவில் எனக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சர்வே எண் 212/3ஏ க்கு எங்கள் பெயரில் பட்டா வழங்கப்படமுடியாது.

6. சர்வே எண் 212/3ஏ ல் 2 ஏர்ஸ் நிலத்திற்கு எனது பெயரில் பட்டா வழங்கியது தவறு. சர்வே எண் 212/3ஏ யாருக்கு உரிமையானது என்றால் எனக்கு தெரியாது. சர்வேஎண் 212/3ஏ க்கு எனது பெயரில் தவறாக பட்டா தாக்கலாகியுள்ளதால் அதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. சர்வே எண் 212/3 எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. தாவா சர்வே எண்ணில் 20 செண்டு நிலத்தில் எனது தகப்பனாருக்கு எவ்வளவு விஸ்தீரணம் உரிமை கோருகிறேன் என்றால் எனக்கு தெரியாது.

7. தாவா சொத்தில் யார் யாருக்கு பாகம் உள்ளது என்று எனக்கு தெரியாது.

தாவா சொத்தின் ஐக்குபந்தி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் 2 முதல் 8 வாதிகளுக்கு எவ்வளவு விஸ்தீரணம் உரிமையானது என்று எனக்கு தெரியாது. தட்சிணாமூர்த்தியின் மனைவி பெயர் ஜெயா. அவர் இந்த வழக்கில் தரப்பினர். தட்சிணாமூர்த்தியின் வாரிசுகளை இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரணை செய்யப்போகிறேனா என்றால் என்னை இந்த வழக்கினை பார்த்துக்கொள்ளும்படி எனக்கு பதிவுசெய்யப்படாத பொதுஅதிகாரப்பத்திரம் அவர்கள் எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள்.

8. இந்த வழக்கு தாக்கல் செய்த போது அவர்கள் பொதுஅதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள். மேற்படி பொதுஅதிகாரப்பத்திரத்தினை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அது என்னிடம் தான் உள்ளது. 2 முதல் 8 வாதிகள் எனக்கு பொதுஅதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்று நான் எனது வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். தட்சிணாமூர்த்தியும் அவரது வாரிசுகளும் எந்தக்காலத்திலும் தாவா சொத்தை அனுபவித்ததில்லை என்றால் சரிதான். நானும் தாவா சொத்தினை அனுபவித்ததில்லை என்றால் சரிதான்.

9. தாவா சொத்து எந்த இடத்தில் உள்ளது என்று எனக்கு தெரியும். இப்போது வரை தாவா சொத்தினை 2ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார்

என்றால் சரிதான், அவர் பெயரில் பத்திரம் உள்ளதால் அவர் பயிர் வைத்து வருகிறார். நான் வருவாய் அலுவலகத்தில் மனு கொடுத்திருந்தேன். நீதிமன்றத்தினை அணுகுமாறு கூறினார்கள். 2ம் பிரதிவாதியை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 2ம் முதல் 8ம் வாதிகள் எனக்கு பொதுஅதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்ததை நான் ஏன் இந்த வழக்கில் மறைத்தேன் என்றால் நான் மறைக்கவில்லை. நான் வீட்டிற்கு பெரியவர் என்பதால் என்னிடம் வழக்கை பார்த்துக்கொள்ளும்படி கூறினார்கள்.

10. கோவிந்தசாமி முதலியாருக்கு இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள். கோவிந்தசாமி முதலியாரின் பூர்வீக சொத்துக்களை அவரது வாரிசுகளான நாங்கள் பாகப்பிரிவினை எதுவும் செய்துக்கொள்ளவில்லை. எனவே கோவிந்தசாமியின் சொத்துக்களில் அவரது நான்கு வாரிசுகளுக்கும் உரிமையுள்ளது என்றால் சரிதான். கோவிந்தசாமியின் அனைத்து வாரிசுகளையும் சேர்க்காமல் இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அது தவறானது என்றால் சரியல்ல, மற்ற வாரிசுகளும் என்னிடம் வழக்கினை பார்த்துக்கொள்ளுமாறு கூறினார்கள்.

11. கோவிந்தசாமியின் வாரிசுகளை இந்த வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் கோவிந்தசாமி முதலியாருக்கும், அவரது

வாரிசுகளான எங்களுக்கும் எந்த உரிமையும் இல்லை என்றாலும் தவறாக வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றாலும் அவை பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல.

12. எங்கள் பூர்வீக சொத்தின் பாகப்பிரிவினை மற்றும் அடமானப்பத்திரத்தினை மறைத்து பட்டாவின் அடிப்படையில் மட்டும் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பட்டாவின் அடிப்படையில் மட்டும் ஒரு சொத்தின் உரிமை மற்றும் அனுபவம் கோரமுடியாது என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை தாவா சொத்து பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

13. 1ம் பிரதிவாதி தாவா சொத்தினை எப்போது கிரையம் வாங்கினார் என்றால் 2003ம் வருடம் கிரையம் வாங்கியதாக கூறினார்கள். எனக்கு 2012ம் வருடம் 6ம் மாதம் தான் மேற்படி விவரம் தெரியும். 1ம் பிரதிவாதியின் கிரையப்பத்திரமும், 2ம் பிரதிவாதியின் கிரையப்பத்திரமும் செல்லாது என்று காலவரம்பிற்குள் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்தேன். இந்த வழக்கினை

தவிர தாவா சொத்துக்களுக்கு வேறு எந்த வழக்கும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

14. மேற்படி வழக்கு முடிவாகிவிட்டது. அது குறித்து இந்த வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். பொய்யான பட்டாவின் அடிப்படையில் தாவா சொத்திற்கு உரிமை கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றாலும் அதிகபட்ச செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.